பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசி 05 புதன்கிழமை 22.10.2025 கதிர் 346

## இது ரகசியம் அல்ல!

அடுத்த ஆண்டு முதல் காலாண்டுப் பகுதியில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவது என்று ஆளும்தரப்பு எடுத்த தீர்மானத்தை காலவரையறையின்றி அது பிற்போட்டுவிட்டது என்று
☞2

## இஸ்ரேலைப் பொறுப்புக்கூற வையுங்கள் பெண்கள் ஒன்றுகூடி நேற்று ஆர்ப்பாட்டம்

பலஸ்தீனத்துக்கு ஆதரவாக நேற்றைய தினம் கொழும்பில் ஒன்றுகூடிய பெண் செயற்பாட்டாளர்கள், பலஸ்தீன மக்களுக்கு எதிராகப் போர்க்குற்றங்களையும், மனிதகுலத்துக்கு எதிரான மீறல்களையும் புரிந்த இஸ்ரேலியக் குற்றவாளிகளைப் பொறுப்புக்கூறச்செய்வதுடன் நீதியை நிலைநாட்டுமாறு வலியுறுத்தி ஐக்கிய நாடுகள் அலுவலகத்திடம் மனு ஒன்றையும் கையளித்தனர்.

நீண்டகாலமாக காஸா மீது இஸ்ரேல் நடத்திவந்த தாக்குதல்கள் அமெரிக்கத் தலையீட்டுடன்கூடிய போர்நிறுத்தஒப்பந்தத்தை அடுத்து அண்மையில் இடைநிறுத்தப்பட்டன.

இதுவரை காலமும் பலஸ்தீனத்தில் பெரும் மனிதப்பேரழிவு நிகழ்வதற்குக் காரணமாக இருந்த போர்க்குற்றங்களையும், மனிதகுலத்துக்குஎதிரானமீறல்களையும்
☞2

## பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு எதிராக விரைவில் நீதிமன்றில் வழக்கு

வசாவிளானில் தனியார் காணியை ஆக்கிரமித்துஇராணுவத்தினர்வைத்தியசாலை அமைத்துவருதை எதிர்த்து வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது. தமிழ் அரசுக் கட்சியின் செயலாளரான அரசுத் தலைவர் சட்டத்தரணி சுமந்திரனால் காணி உரிமையாளர் சார்பில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது.

சுமார் 35 வருடங்களாக இந்தப் பகுதிகள் இலங்கை அரசபடையினரின் ஆக்கிரமிப்பில் இருக்கின்றது. அங்கு மீள்குடியமர்வுக்கு இன்னும் அனுமதி வழங்கப்படவில்லை. முகாம் பகுதிக்குள் உள்ள தனியார் காணிகள் அனைத்தும் விடுவிக்கப்படும் என்று தற்போதைய என்பிபி ஆளும்தரப்பு வாக்குறுதியளித்துள்ள நிலையிலும் எந்தவித அனுமதியும் பெறாமல் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியில் இராணுவத்தினர் வைத்தியசாலைக் கட்டடத்தை அமைத்து வருகின்றனர்.
☞2

## கனமழையால் 747 பேர் பாதிப்பு

மழைக்காலநிலையினால் இதுவரையில் 187 குடும்பங்களைச் சேர்ந்த 747 பேர் பாதிக்கப்பட்டிருப்பதுடன் வீடுகள் மற்றும் வியாபார நிலையங்கள் உள்ளடங்கலாக சொத்துக்களும் சேதமடைந்துள்ளன. மூவர் உயிரிழந்துள்ளனர்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில், தற்காலிகமாக அதிகரித்து வீசக்கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைக் குறைத்துக்கொள்வதற்கு ஏற்றவாறு முன்னெச்சரிக்கையுடன் செயற்படுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

தற்போதைய காலநிலையின் காரணமாக ஒக். 18 தொடக்கம் நேற்று வரையான காலப்பகுதியில் 187 குடும்பங்களைச் சேர்ந்த 747 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மூவர் உயிரிழந்துள்ளனர். அதுமாத்திரமன்றி 152 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

குறிப்பாக குருணாகல் மாவட்டத்தில் 111 குடும்பங்களைச் சேர்ந்த 473 பேரும், அநுராதபுரம் மாவட்டத்தில் 42 குடும்பங்களைச் சேர்ந்த 153 பேரும், காலி மாவட்டத்தில் 22 குடும்பங்களைச் சேர்ந்த 76 பேரும்,
☞2

# இசைப் பிரியாவின் கொலையில் இராணுவக் குழுவிற்குத் தொடர்பு

### சரத் பொன்சேகா அதிரடி

**விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளி இசைப்பிரியா படுகொலை செய்யப்பட்ட விடயத்தில் முன்னாள் இராணுவப் பிரதானி கபில ஹெந்தவிதாரணவின் குழுவுக்குத் தொடர்புள்ளதுஎன்றுமுன்னாள்இராணுவத் தளபதியானபீல்ட்மார்ஷல்சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார். ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் சரத் பொன்சேகா இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:**



**இறுதிப் போரின்போது**
☞2

### நவம்பர் 19 வரை

## வவுனியா மாநகர சபையில் தெரிவான நிர்வாகம் செயற்பட இடைக்காலத்தடை

### மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு

வவுனியா மாநகர சபையின் தெரிவு செய்யப்பட்ட நிர்வாகத்தின் செயற்பாடுகளுக்கு மேல் முறையீட்டு நீதிமன்றம் நவம்பர் 19 வரை இடைக்காலத் தடை விதித்துள்ளது.

வவுனியா மாநகர சபையின் பிரதி முதல்வர் கார்த்தீபன் சபையின் எல்லைக்கு வெளியே வாழும் ஒருவர் என்பதால் அவர் சபையின் உறுப்பினராக இருப்பதற்குத் தகுதியற்றவர் என்று எதிர்ப்புத் தெரிவித்துத் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரித்த மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்தத் தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

வவுனியா மாநகர சபையில் ஆட்சியமைப்பதற்கு ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணிக்குப் பெரும்பான்மை தேவைப்பட்டபோது, தனக்குப் பிரதி முதல்வர் பதவி தந்தால் ஆதரவு என்ற நிபந்தனையுடன் அவர் ஆதரவு வழங்கினார். அதனடிப்படையில் அவருக்குப் பிரதி முதல்வர் பதவியும் வழங்கப்பட்டது. எனினும் அவர் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்குட்பட்ட எல்லையில் வசித்துவரும் நிலையில் மாநகர சபையில் போட்டியிட்டு அதனூடாகப் பதவியைப் பெற்றமை சட்ட விதிகளை மீறிய செயற்பாடு என மாநகர சபை உறுப்பினர்களான தேசிய மக்கள் சக்தியின் சார்பில் விஜயகுமாரும் சுயேச்சைக் குழு உறுப்பினரான சிவசுப்பிரமணியமும் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

நான்கு தவணைகளாக இரு தரப்பினரின் வாதங்களையும்
☞2

## மருந்துப் பற்றாக்குறைக்கு உடனடித் தீர்வு வேண்டும்

### அஜித் பெரேரா எம்.பி. தெரிவிப்பு

அரச வைத்தியசாலைகளில் நிலவும் மருந்துப் பற்றாக்குறைக்கு ஆளும்தரப்பு உடன் தீர்வு காணவேண்டும். மருந்து கொள்வனவில் நிலவும் பற்றாக்குறைக்குத்தீர்வு காண்பதற்குஇலத்திரனியல்முறைமையிலான விலைமனுகோரலை அறிமுகப்படுத்த வேண்டும், அதற்குரிய வளங்களை ஆளும்தரப்பு வழங்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி.பெரேரா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் கீழான 2446/34 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதி மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
☞2

## மருந்துகளை தட்டுப்பாடின்றி விநியோகிக்க நடவடிக்கை

### சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

அரசவைத்தியசாலைகளுக்குத்தடையின்றி மருந்துகளை விநியோகிப்பதற்கும், மருந்து பொருட்களின்தரத்தைஉறுதிப்படுத்துவதற்கும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மருந்து தட்டுப்பாடு என்று மக்கள் மத்தியில் வீண் அச்சத்தை ஏற்படுத்த ஒரு தரப்பினர் திட்டமிட்ட வகையில் செயற்படுகிறார்கள் என சுகாதாரம் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் கீழான

244ஸ6/34ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதி மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா களுத்துறை நாகொட போதனா வைத்தியசாலையில் மருந்து பற்றாக்குறை நிலவுவதாக குறிப்பிட்டார். களுத்துறை மாவட்டத்தில் பிரதான மூன்று அரச வைத்தியசாலைகள் உள்ளன. அங்கு இவர்கள் குறிப்பிடுவதை போன்று பாரதூரமான வகையில் மருந்து தட்டுப்பாடுகள் ஏதும் காணப்படவில்லை.

சட்டத்தின் பிரகாரம் மருந்துகளின் தரம் மற்றும் மருந்து விநியோகம்
☞2

## வடக்கு ஆசிரியர் இடமாற்றத்தை எதிர்த்து மேல் நீதிமன்றில் வழக்கு

வடக்குமாகாணக்கல்வித்திணைக்களத்தின் இந்த வருட ஆசிரியர் இடமாற்றப் பட்டியலை எதிர்த்து தமிழ் ஆசிரியர் சங்கம் வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

இந்த இடமாற்றப் பட்டியலில் சேவையின் தேவை கருதிய இடமாற்றம் என்ற வகையில் 290 ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதை எதிர்த்தே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தரவுகள் எவையுமின்றி, முறையற்ற விதமாக இடமாற்றம் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக தமிழர் ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது. சேவையின் தேவை கருதிய இடமாற்றத்தை வழங்கும் அதிகாரம் மாகாணக்
☞2

## இனி இது .....

சொல்லப்படுகின்றது. சிங்களச் செய்தி நிறுவனமான 'மவ்ரட்ட'இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

கடந்த வாரம் இது தொடர்பில் ஆளும்தரப்பிற்குள் நடந்த கலந்துரையாடல்களில் ஜேவிபியினர் மாகாண சபை, வடக்கு கிழக்கு மக்களுக்கான அரசியல் தீர்வு என்பன தொடர்பில் ஆழமாக ஆராயப்படவேண்டியிருக்கின்றதுஎன்றுகுரல் கொடுத்ததால். ஆளும்தரப்பு இந்த முடிவிற்கு வந்திருப்பதாகவும் 'மவ்ரட்ட'தெரிவிக்கின்றது.

மாகாண சபைத் தேர்தலையொட்டி அடுத்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஆளும்தரப்பு அறிவிக்கவிருந்த சலுகைகளை நிறுத்துவதற்கும் இப்போது தீர்மானிக்கப்பட்டிருப்பதாக அந்தச் செய்திகள் கூறுகின்றன.

இப்படிச் செய்தி வெளியானபோதும் அடுத்த ஆண்டு தேர்தல் நடக்கும் என்றே ஆளும்தரப்பினர் நேற்று வரையில் பகிரங்கமாகத் தெரிவித்து வருகின்றனர்.

தேர்தல் நடக்காது என்கிற இந்த அறிவிப்பு தமிழர் தரப்பில் சிலருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது என்று தெரியவருகின்றது. குறிப்பாக சுமந்திரனுக்கு எதிராக வடக்கு மாகாண சபைத் தேர்தலிலும் பொது வேட்பாளர் என்கிற ரீதியில் முன்னாள் நீதிபதி ஒருவரைக் களமிறக்குவதற்கு மும்முரமாகத் திட்டமிட்டு வந்த அந்தத் தரப்பு தேர்தல் குறித்த நிச்சயமற்ற தன்மையால் கடுமையாக விசனமடைந்துள்ளது.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடந்தால் அதில் தான் முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிடுவார் என்று தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் சுமந்திரன் அறிவித்திருந்தார். இதையடுத்து உசாரடைந்த அவருக்கு எதிரான வழக்கமான தரப்புக்கள், அவரை முதலமைச்சர் வேட்பாளராக வராமல் தடுக்கும் வகையில் தமிழ் கட்சிகள் சிலவற்றை ஒன்றிணைத்து அவற்றின் பொது வேட்பாளர் என்கிற ரீதியில் முன்னாள் நீதிபதி ஒருவரை நிறுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருந்தன. அது தொடர்பான அறிவித்தலை சில தினங்களில் வெளியிடுவதற்கான தயார்ப்படுத்தலிலும் அவை மும்முரமாக இருந்தன. இந்தநிலையில், மாகாண சபைத் தேர்தல் நடக்காது என்கிற செய்தி வந்திருப்பது அந்தத் தரப்புக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது.

.........................................................

இந்தியாவின் நன்கொடையில் காங்கேசன் துறைமுகத்தை சீரமைத்து மேம்படுத்துவதற்கான திட்டத்தை கப்பல் போக்குவரத்து துறைமுகங்கள் அமைச்சின் முன்னாள் அமைச்சரான பிமல் ரத்நாயக்க உதாசீனப்படுத்தி வந்தார் என்பது தெரிந்ததே. இந்திய உதவியில் காங்கேசன் துறைமுகம் மற்றும் பலாலி விமான நிலையத் திட்டங்களை மேற்கொண்டாலும் அவற்றைப் பராமரிப்பதற்கு இலங்கை அரசுக்குப் பெருந்தொகைப் பணம் செலவாகும் என்றும். அதற்கேற்ற வகையில் இந்தத் திட்டங்களில் இருந்து வருமானங்கள் கிடைக்காது என்றும் அவர் தெரிவித்திருந்தார். அதுமட்டுமல்ல வடக்கில் இந்த அபிவிருத்திகள் மேம்படுத்தப்பட்டால் அது அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் மத்தள விமான நிலையம் போன்றே தோல்வியடையும் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்தநிலையிலேயே அவர் அந்த அமைச்சுப் பதவியில் இருந்து தூக்கப்பட்டார். அவரது அமைச்சுக்குப் புதியவர் நியமிக்கப்பட்டார். இந்தியத் திட்டங்களை நிராகரித்து இந்தியாவிற்கு எதிராகச் செயற்பட்டார் என்ற காரணத்தாலேயே பிமலிடமிருந்து துறைமுக அமைச்சுப் பதவி பறிக்கப்பட்டது என்ற கருத்துக்களும் வெளியாகின. இந்தப் பின்னணியில் இப்போது துறைசார் பிரதி அமைச்சர் காங்கேசன் துறைமுகத்தை இந்திய நன்கொடையில் மேம்படுத்துவது குறித்து இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் அது தொடர்பான பேச்சுக்கள் தொடர்கின்றன என்றும் கூறியிருக்கின்றார்.

காங்கேசன்துறை (கே.கே.எஸ்) துறைமுகத்தின் மேம்பாட்டிற்காக இந்திய அரசு வழங்கும் 62 மில்லியன் டொலர் நன்கொடைக்கான நிபந்தனைகள் குறித்து இன்னும் விவாதங்கள் நடந்து வருவதாக துணை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

துறைமுகத்தை மேம்படுத்தல் தொடர்பான சமூக-பொருளாதார தாக்க ஆய்வு தொடங்கப்பட்டுள்ளதாகவும், இலங்கை துறைமுக அதிகார சபை தற்போது இந்த ஆய்வை நடத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

'ஒரு துறைமுகம் நிறுவப்படும்போது, அதன் சமூக-பொருளாதார தாக்கத்தை நாம் கவனிக்க வேண்டும். அது இறுதி செய்யப்பட்டவுடன், தேவையான பேச்சுகளைத் தொடங்கி அதற்கேற்ப முன்னேறுவோம்,' என்று அவர் கூறினார். .

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## இசைப் பிரியாவின்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2 இலட்சத்து 35 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் சரணடைந்தனர். பல்லாயிரக்கணக்கான விடுதலைப்புலிகளும் மக்களுடன் மக்களாகச் சரணடைந்தனர். அவர்களுக்குத் தேவையான உடை உணவு, மருந்து என்பவற்றை வழங்கி, புனர்வாழ்வில் இருந்து செல்லும் வரை அனைவரையும் முறைப்படி பாதுகாத்தோம். எனினும், இறுதிப் போரின்போது இடம்பெற்ற சில விரும்பத்தகாத சம்பவங்கள் தொடர்பில் இன்றளவும் பெரும் சர்ச்சைகள் நிலவுகின்றன.

அவற்றில் ஒன்று இசைப்பிரியாவின் படுகொலை. இசைப்பிரியா படுகொலை செய்யப்பட்ட விடயத்தில், முன்னாள் இராணுவப் பிரதானி கபில ஹெந்தவிதாரணவின் குழுவுக்குத் தொடர்புள்ளது என்று உறுதியாகக் கூறுகின்றேன். இந்த விடயம் தொடர்பில் தீர்க்கமான விசாரணைகள் இடம்பெறவேண்டும். அத்துடன், சரணடைந்த சிலரைக் கொலை செய்த குற்றச்சாட்டு ஜகத் ஜயசூரிய மீதும் காணப்படுகின்றது. இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பில் ஜகத் ஜயசூரியவுக்கு எதிராக நான் இராணுவ விசாரணைகளைக்கூட முன்னெடுத்தேன். விசாரணைகள் இடம்பெறும்போது இடைநடுவில் நான் பதவி நீக்கப்பட்டு ஜகத் ஜயசூரிய இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டார்.

அப்போது, ஜகத் ஜயசூரிய மீதான குற்றச்சாட்டுத் தொடர்பில் மஹிந்தவிடம் தெரிவித்தேன். எனினும், அதனைக் கருத்தில் கொள்ளவில்லை. இராணுவத்தினருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும். சர்வதேசத்தில் இருந்தும் குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்படுவதால், சர்வதேச கண்காணிப்பாளர்களின் கீழ் விசாரணைகளை முன்னெடுக்க முடியும். அப்படிச் செய்யும் பட்சத்தில் எமது விசாரணைகள் வெளிப்படைத் தன்மையுடன் அமையும்.

முறையான சாட்சிகள் இருக்குமாக இருந்தால் நியாயமான விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை - என்றார்.

கோட்டாபயவின் மூளையாகச் செயற்பட்டவர் கபில ஹெந்தவிதாரண. இராணுவப் பிரதானியாக இருந்த கபில ஹெந்தவிதாரண பின்னர் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராகச் செயற்பட்டார். அதேவேளை கபில ஹெந்த விதாரண, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவின் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களின் மூளையாகச் செயற்பட்டார் என்றும் குற்றச்சாட்டுகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது

## இஸ்ரேலைப்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்த்திய இஸ்ரேலிய போர்க்குற்றவாளிகள் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படுத்தி, நீதி நிலைநாட்டப்படவேண்டும் என வலியுறுத்தி வட, கிழக்கு மாகாணங்களைத் தளமாகக்கொண்டு இயங்கிவரும் பெண்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பலஸ்தீன விடுதலை அமைப்பின் பிரதிநிதிகள் இணைந்து நேற்று கொழும்பில் உள்ள பலஸ்தீனத் தூதரகத்தில் இருந்து ஐக்கிய நாடுகள் அலுவலகம் வரை கவனயீர்ப்புப் பேரணி ஒன்றை ஏற்பாடு செய்திருந்தனர்.

பி.ப 3.45 மணியளவில் பலஸ்தீனத்தூதுரகத்தில் இருந்து ஆரம்பமான இப்பேரணியில் பங்கேற்றிருந்த பெண் செயற்பாட்டாளர்கள் 'பலஸ்தீனத்துக்கு விடுதலை', 'போர்க்குற்றங்கள் தொடர்பில் நீதியை நிலைநாட்டுங்கள்', 'போலியான தற்காலிகப் போர்நிறுத்தம்', 'செம்மணி முதல் காஸா வரை - நிலம் மறக்காது' எனும் வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்துடன் பலஸ்தீன விடுதலையை வலியுறுத்தும் முழக்கங்களையும் எழுப்பினர்.

மேற்படி பேரணி ஐக்கிய நாடுகள் அலுவலகத்தை நோக்கி நகரத் தொடங்கிய வேளையில், அங்கு குவிக்கப்பட்டிருந்த பொலிஸாரும் அவர்களுக்குச் சமாந்தரமாக ஐ.நா அலுவலகம் நோக்கி நகர்ந்தனர்.

பேரணி ஐ.நா அலுவலகத்தைச் சென்றடைந்ததன் பின்னர், அங்கு சிறிது நேரம் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட செயற்பாட்டாளர்கள், பின்னர் ஐ.நா அலுவலக அதிகாரியிடம் தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவைக் கையளித்தனர்.

அங்கு கருத்து வெளியிட்ட சிவில் சமூக மற்றும் பெண்கள் உரிமை செயற்பாட்டாளர் ஷ்ரீன் ஸரூர், தற்போது நடைமுறைப்படுத்தப்படுவதாகக் கூறப்படும் தற்காலிகப் போர்நிறுத்தம் முற்றிலும் பொய்யானது எனவும், அதனையும் மீறி கடந்த சில தினங்களில் சுமார் 200 பேர் வரை இஸ்ரேலியப் படையினரால் கொல்லப்பட்டிருக்கின்றனர் எனவும் சுட்டிக்காட்டியதுடன் இவ்வாறு போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் இஸ்ரேலையும், அதனை வெறுமனே வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கும் அமெரிக்காவையும் தான் வன்மையாகக் கண்டிக்கிறார் என்று தெரிவித்தார்.

அதேவேளை அங்கு கருத்துரைத்த செயற்பாட்டாளர் அனீஷா ஃபிர்தௌஸ், பலஸ்தீனத்தில் பெரும் எண்ணிக்கையான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டிருக்கும் நிலையில், அதற்குப் பொறுப்புக்கூறவேண்டிய குற்றவாளிகள் சட்டத்தின்முன் நிறுத்தப்படவேண்டும் என வலியுறுத்தினார்.

## மருந்துகளை ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் ஆராயும் பொறுப்பு தேசிய மருந்துகள் ஒழுங்குப்படுத்தும் அதிகாரசபைக்கு வழங்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் இந்த அதிகார சபைகளில் பல பிரச்சினைகள் காணப்பட்டன. அத்துடன் சுகாதார அமைச்சும் ஊழல் மிகுந்ததாக காணப்பட்டது. தற்போது அவ்வாறான நிலைமை இல்லை.

இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் மருந்துகள் பரிந்துரை மீளாய்வுக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட பொருட்களின் பட்டியலுடன் தொடர்புடையதாக விசேட வைத்திய நிபுணர்கள் சங்கங்களைக் கொண்ட ஒரு குழுவினால் முன்னுரிமை பட்டியல் தயாரிக்கப்படுகிறது. அதன்படி ஆண்டின் இறுதிக் காலாண்டில் நிறுவனங்களில் இருந்து பெறப்படும் வருடாந்த மதிப்பீட்டின் அடிப்படையில் அடுத்த ஆண்டின் ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் 11 மாதக் காத்திருப்பு காலத்துடன் இறக்குமதி செய்யப்படும் மருந்துகளுக்காக அரச மருந்தக கூட்டுத்தாபனத்துக்கு மருந்து விநியோகப் பிரிவு ஊடாக அனுப்பல் கட்டளைகள் வழங்குவதே பொதுவான நடைமுறையாகும்.

மருந்து கொள்வனவை வினைதிறனாக்குவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அரச வைத்தியசாலைகளுக்கு தடையின்றி மருந்துகளை விநியோகிப்பதற்கும், மருந்து பொருட்களின் தரத்தை உறுதிப்படுத்துவதற்கும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மருந்து தட்டுப்பாடு என்று மக்கள் மத்தியில் வீண் அச்சத்தை ஏற்படுத்த ஒரு தரப்பினர் திட்டமிட்ட வகையில் செயற்படுகிறார்கள். மருந்துகளின் தரம் மற்றும் விநியோகத்தை சீராக்கும் பொறுப்பு சுகாதார அமைச்சுக்கு உண்டு. இந்த பொறுப்பை சிறந்த முறையில் செயற்படுத்துவோம் என்றார்.

## வவுனியா...

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேட்ட பின்னர் நேற்று நீதிமன்றம் வவுனியா மாநகர சபையின் முழுமையான செயற்பாடுகளுக்கும் தடைவிதித்து இடைக்கால உத்தரவைப் பிறப்பித்தது.

## கனமழையால்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேகாலை மாவட்டத்தில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரும், பதுளை மாவட்டத்தில் 11 குடும்பங்களைச் சேர்ந்த 44 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். அதேபோன்று குருணாகல் மாவட்டத்தில் 111 வீடுகளும், அநுராதபுரம் மாவட்டத்தில் 31 வீடுகளும், பதுளை மாவட்டத்தில் 10 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. அதேவேளை அநுராதபுரம் மற்றும் கேகாலை மாவட்டங்களில் இரு உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளன.

மேலும் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள பகுதிகளில் மேல் மாகாணம், சப்ரகமுவ மாகாணம், மத்திய மாகாணம், வடமேல் மாகாணம், தென் மாகாணம், வட மாகாணம் மற்றும் அநுராதபுரம் மாவட்டம் என்பன உள்ளடங்குகின்றன.

இது இவ்வாறிருக்க வளிமண்டலவியல் திணைக்களத்தினால் நேற்று பி.ப 2.00 மணிக்கு வெளியிடப்பட்ட இன்றைய தினத்துக்கான (22) பொதுவான வானிலை முன்னறிவிப்பின் பிரகாரம், இலங்கையைச் சூழவுள்ள பகுதிகளில் விருத்தியடைந்த குறைந்த அழுத்தப் பிரதேசம் மேலும் வலுவடைந்து மேற்கு - வடமேற்குத் திசையில் நகரக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக எதிர்வுகூறப்பட்டுள்ளது.

அத்தோடு மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல், தென் மற்றும் வடக்கு மாகாணங்களில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன்கூடிய மழையோ பெய்வதற்கான சாத்தியம் காணப்படுவதாகவும், இந்தப் பிரதேசங்களில் சில இடங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இடியுடன்கூடிய மழை பெய்யும் வேளைகளில், தற்காலிகமாக அதிகரித்து வீசக்கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைக் குறைத்துக்கொள்வதற்கு அவசியமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுடன் அவதானமாக செயற்படுமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## பலாலி....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணி உரிமையாளரின் கோரிக்கையை அடுத்து தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சிவஞானம் மற்றும் செயலாளர் சுமந்திரன் ஆகியோர் நேற்று அந்தப் பகுதிக்கு வருகை தந்து ஆக்கிரமிக்கப்பட்ட இடத்தில் கட்டடம் அமைக்கப்படுவதைப் பார்வையிட்டனர். வலி. வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சுகிர்தனும் அவர்களுடனிருந்தார்.

தனது காணியை மீட்டுத் தருமாறு காணி உரிமையாளர் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில், அதற்கான சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு இராணுவத்தினருக்கு எதிராக நீதிமன்றத்தில் விரைவில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுமந்திரன் அங்கு உறுதியளித்தார்.

## மருந்துப்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியசாலைகளில் நிலவும் மருந்து பற்றாக்குறை பெரும் பிரச்சினையாக காணப்படுகிறது. இலவச சுகாதார சேவையை மாத்திரம் நம்பியுள்ள பெரும்பாலான மக்கள் இதனால் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். 75 ஆண்டுகால அரசியலில் நாட்டுக்கு ஏதும் அபிவிருத்திகள் கிடைக்கவில்லை என்று குறிப்பிட முடியாது. இலவச சுகாதார சேவை, இலவச கல்வித்துறையால் பலப்படுத்தப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தின் 225 உறுப்பினர்களும் இலவச கல்வியில் தான் கற்று தேர்ச்சிப் பெற்றுள்ளார்கள். ஆகவே 75 ஆண்டுகாலத்தை சாபம் என்று பழிக்காதீர்கள். இலவச கல்வி மற்றும் இலவச சுகாதாரம் நடுத்தர மக்களுக்கு அத்தியாவசியமானது.

அரச வைத்தியசாலைகளில் மருந்து பொருட்களுக்கான தட்டுப்பாடு தீவிரமடைந்துள்ளது. களுத்துறை நாகொட போதனா வைத்தியசாலையில் 100 மருந்து பொருட்களுக்கு தட்டுப்பாடு காணப்படுகிறது. அதேபோல் அத்தியாவசிய மருந்து பொருட்களுக்கு தட்டுப்பாடு காணப்படுகிறது. மருந்து கொள்வனவில் காணப்படும் தாமதம் மற்றும் முறைகேடுகள் மருந்து தட்டுப்பாட்டுக்கு பிரதான காரணியாக உள்ளது.

அவசர மருந்துக் கொள்வனவின்போது இந்த முறைகேடுகள் இடம்பெறுகின்றன. ஆகவே இலத்திரனியல் முறைமையிலான விலைமனுகோரலுடனான மருந்து கொள்வனவை அறிமுகப்படுத்த வேண்டும். இதற்குரிய மனித மற்றும் பௌதீக வளங்களை ஆளும்தரப்பு வழங்க வேண்டும். இதற்குரிய விடயதானங்களை அமைச்சு மட்டத்தில் உருவாக்க வேண்டும்.

1990 சுவசெரிய திட்டத்தின் பெயர், நிறம் மற்றும் இலக்கத்தை மாற்ற போவதில்லை என்று அமைச்சர் குறிப்பிட்டது வரவேற்கத்தக்கது. ஆனால் பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க, சுவசெரிய அம்புலன்ஸ் வண்டியின் நிறம் மற்றும் இலக்கத்தை மாற்ற வேண்டும் என்று குறிப்பிடுகிறார். ஆகவே இவ்விடயத்தில் ஆளும்தரப்பு உறுதியான நிலைப்பாட்டில் இருக்க வேண்டும்.

1990 சுவசெரிய என்ற பெயர் நாட்டில் சட்டத்தின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே கொள்கை அடிப்படையில் இதனை மாற்றியமைக்க முடியாது. இவ்வாறான சிக்கல்களை தோற்றுவிப்பதை ஆளும்தரப்பு தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# யாழ். போதனா வைத்தியசாலை படுகொலை நினைவேந்தல் நேற்று

யாழ். போதனா வைத்தியசாலையினுள் அத்துமீறி உள்நுழைந்த இந்திய இராணுவத்தினரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட வைத்தியர்கள் உள்ளிட்ட 68 பேரின் நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று யாழ். போதனா வைத்தியசாலை முன்றலில் இடம்பெற்றது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில்










இந்த நிகழ்வு இடம்பெற்றது. படுகொலை செய்யப்பட்டவர்கள் நினைவாக ஈகச் சுடர் ஏற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

## சுவசெரிய இலக்கத்தை மாற்றவேண்டாம் எதிர்க் கட்சி எம்.பி. சபையில் வலியுறுத்து

நிர்ணய விலைக்கு மாறாக அதிக விலைக்கு மருந்து பொருட்களை விற்பனை செய்பவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கும் வழிமுறைகளை உருவாக்குங்கள். அதனை விடுத்து சுவசெரிய சேவையின் 1990 இலக்கத்தை மாற்றி 8889 என்று இலக்கமிட முயற்சிக்க வேண்டாம் என்று எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான கயந்த கருணாதிலக ஆளும்தரப்பிடம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் கீழான 2446/ 34 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதி மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் சுகாதார சேவை ஒருகாலத்தில் உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்டு, வரவேற்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியினால் சுகாதார சேவை மிக மோசமாக பாதிக்கப்பட்டது. மருந்து தட்டுப்பாடு மற்றும் விலையேற்றத்தால் நடுத்தர மக்கள் பாதிக்கப்பட்டார்கள்.இந்த பிரச்சினை இன்றளவிலும் காணப்படுகிறது.

அரச வைத்தியசாலைகளில் இன்றளவிலும் மருந்து தட்டுப்பாடு நிலவுகிறது. உயிர் காக்கும் மருந்துகள் மற்றும் அத்தியாவசிய மருந்து பொருட்கள், மருத்துவ உபகரணங்களுக்கும் தட்டுப்பாடு காணப்படுகிறது. இந்தப் பிரச்சினைகளுக்கு ஆளும்தரப்பு உடன் தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும்.

சுவசெரிய சேவையை மாற்றியமைக்கப் போவதில்லை என்று அமைச்சர் குறிப்பிட்டார்.ஆனால் அந்தச் சேவையை மாற்றியமைப்பதாக ஆளும்தரப்பின் பிரதி அமைச்சர் தான் தொடக்கத்தில் குறிப்பிட்டார். இது ஆளும்தரப்பின் முரண்பாட்டையும், கொள்கை வேறுப்பாட்டையும் வெளிப்படுத்துகிறது. 1990 என்ற இலக்கத்தை மாற்றி 8889 என்று இலக்கமிட ஆளும்தரப்பு முயற்சிக்கக்கூடாது. 1990 என்று சுவசெரிய இலக்கம் மக்கள் மனங்களில் உள்ளது.

மருந்துகளின் தரம் மற்றும் விலைகள் குறித்து ஆளும்தரப்பு உறுதியான கொள்கையை கடைபிடிக்க வேண்டும். நிர்ணய விலைக்கு மாறாக ஒரு தரப்பினர் அதிக விலைக்கு மருந்துகளை விற்பனை செய்பவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கைகளை எடுக்க உரிய வழிமுறைகளை உருவாக்க வேண்டும் என்றார்.

## சுவசெரிய திட்டத்தை மாற்றுகிற எண்ணம் ஆளும்தரப்பிடமில்லை

### சுகாதார அமைச்சர் அறிவிப்பு

1990 சுவசெரிய அம்புலன்ஸ் வண்டியின் நிறத்தையோ அல்லது சுவசெரிய மன்றம் என்ற திட்டத்தையோ மாற்றுவதற்கு எவ்வித தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை. மாறாக இந்த திட்டத்தை நவீனமயப்படுத்தவே தீர்மானிக்கப்பட்டு அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என சுகாதாரத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின் போது 27/ 2 இன் கீழ் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2018ஆம் ஆண்டின் 18ஆம் இலக்கச் சட்டத்தின் ஊடாக 'சுவசெரிய மன்றம்' என்ற அடிப்படையில் 1990 சுவசெரிய அம்புலன்ஸ் வண்டிச் சேவை அறிமுகப்படுத்தப்பட்டது. நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் இந்த சேவை அறிமுகப்படுத்தப்பட்டது. எதிர்க்கட்சியின் உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா இந்த திட்டத்தை அறிமுகப்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளார்.

1990 சுவசெரிய அம்புலன்ஸ் வண்டியின் நிறத்தையோ அல்லது சுவசெரிய மன்றம் என்ற திட்டத்தையோ மாற்றுவதற்கு எவ்வித தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை. மாறாக இந்த திட்டத்தை நவீனமயப்படுத்தவே தீர்மானிக்கப்பட்டு அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பொது மக்கள் இந்த சேவையை நாடும் போது அதன் செயற்பாடுகள் துரிதமாக்கப்பட வேண்டும்.

1990 சுவசெரிய அம்புலன்ஸ் சேவையில் பல குறைப்பாடுகள் காணப்படுகின்றன. புதிதாக சேவையாளர்களை இணைத்துக் கொள்வதற்கும், மருத்துவ உபகரணங்களை பெற்றுக்கொள்வதற்கும் இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 5000 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் ஒத்துழைப்புடன் 100 அம்புலன்ஸ் வண்டிகளைப் பெற்றுக்கொள்வதற்கு பேச்சு நடத்திளோம்.ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிவாரண கடன் அடிப்படையில் முதற்கட்டமாக 44 அம்புலன்ஸ் வண்டிகளைபெற்றுக்கொள்வதற்குத்தீர்மானித்துள்ளோம்.

1990 சுவசெரிய திட்டத்துக்கு 500 அம்புலன்ஸ் வண்டிகளை இணைத்துக் கொள்வதற்குரிய நடவடிக்கைளை மேற்கொண்டுள்ளோம். ஆகவே 1990 சுவசெரிய அம்புலன்ஸ் திட்டத்தை இல்லாதொழிக்கும் எண்ணம் ஆளும்தரப்பிற்குக் கிடையாது. ஆகவே தவறான நிலைப்பாட்டை சமூகமயப்படுத்த வேண்டாம் என்றார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தனியுரிமை ஆபத்தில்

இலங்கை முழுவதும் கடந்த சில வாரங்களாகப் பேசப்பட்டு வந்தது கொழும்பில் நடந்த குற்றச்செயல், அதைச் சுற்றிய விசாரணைகள், மேலும் ஆளும்தரப்பு பெரிதும் பேசிய 'இணையமயப்படுத்தல்' (Digitalisation) முயற்சிகள் பற்றியதாக இருந்தது. ஆனால், அதே சமயம் மக்களின் அன்றாட வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு மிக முக்கியமான பிரச்சினையும் சமூக ஊடகங்களில் வெளிச்சத்துக்கு வந்தது – அதாவது மருத்துவத் தகவல் கசிவு என்ற தனியுரிமை மீறல் சம்பவம் குறித்த தகவல்கள் அது.

### அதிர்ச்சி குற்றச்சாட்டு

சமூக ஊடகங்களில் பெயர் பெற்ற ஒரு தொழில் முனைவோர், தன் மகள் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்த கொழும்பிலுள்ள ஒரு தனியார் மருத்துவமனை தனியுரிமையை மீறியதாக குற்றஞ் சாட்டியுள்ளார். அவரின் தகவலின்படி, அந்த மருத்துவமனை அவரது மகளின் சிகிச்சை விவரங்களை காப்புறுதி நிறுவனத்துக்கு அனுப்பி வைத்தது. அதன் பின்னர், அந்த நிறுவனம் தந்தையைத் தொடர்பு கொண்டு பணம் செலுத்தும் முறையைப் பற்றிக் கேட்டதாக அவர் பதிவிட்டார்.

'இது ஒரு முழுமையான தனியுரிமை மீறல்!' என அவர் சமூக ஊடகத்தில் (X – தளத்தில்) எழுதினார். இந்த குற்றச்சாட்டு வெறும் 'சேவை குறைபாடு' அல்ல – இது நெறிமுறை மீறல், நம்பிக்கை மீறல், மேலும் சட்டத்தையும் மீறும் செயல் ஆகும். மருத்துவத் தகவல் என்பது ஒருவரின் வாழ்க்கையில் மிகவும் தனிப்பட்ட பகுதி. அதனை அனுமதியின்றி பகிர்வது ஏற்றுக்கொள்ள முடியாதது.

### இருண்ட பக்கம்

இலங்கை அரசு 'டிஜிட்டல் பொருளாதாரம்' என்கிற பேரியக்கத்தை முன்னெடுத்து வருகிறது. ஆனால், அந்த டிஜிட்டல் உலகம் பாதுகாப்பாக இருக்க வேண்டிய சட்ட அடித்தளம் இலங்கையில் இன்னும் முழுமையடையவில்லை. தனிநபர் தரவு பாதுகாப்புச் சட்டம் (Personal Data Protection Act - PDPA) நடைமுறையில் வருவதற்காக நீண்டகாலமாக காத்திருக்கிறது.

இந்தச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்படவேண்டிய தனிநபர் உரிமைப் பாதுகாப்பு அதிகார சபையின் (Data Protection Authority –DPA) குழு கடந்த ஆண்டு நியமிக்கப்பட்டது என்றாலும், சட்டம் இன்னும் முழுமையாக செயல்படவில்லை. ஆளும்தரப்பு வெளியிட்ட அறிவிப்பின்படி, 2025 மார்ச் 18 முதல் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்படும் என கூறப்பட்டுள்ளது. ஆனால் மக்களின் தகவல் பாதுகாப்பாக இருக்கின்றதா?

இன்று நம்முடைய மருத்துவ பதிவுகள், வங்கிக்கணக்குத் தகவல்கள், காப்புறுதி விவரங்கள் என அனைத்தும் மின்னணு வடிவில் பதிவு செய்யப்படுகின்றன. ஆனால் அவற்றை மருத்துவமனைகள், காப்புறுதி நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள் எவ்வாறு கையாளுகின்றன என்பதை கண்காணிக்கக்கூடிய சட்டக் கட்டுப்பாடு இலங்கையில் இல்லாதது மிகப்பெரிய ஆபத்து.

பல நேரங்களில் மக்கள் அனுமதி இல்லாமல் தகவல்கள் விற்பனைப் பொருளாக மாறுகின்றன. ஒருவரின் நோய்த் தகவல், மருந்துப் பயன்பாடு, அல்லது மருத்துவ வரலாறு போன்றவை மூன்றாம் தரப்புக்குக் கசிந்தால் அதன் விளைவுகள் பெரும் பாதிப்பை உண்டாக்கும்.

### நீதிமன்றப் பாதுகாப்பு

சட்டம் இன்னும் அமுலில் இல்லாத நிலையில், இவ்வாறான தனியுரிமை மீறல்களுக்கான பாதுகாப்பு தற்போது நீதிமன்றங்களிடம் மட்டுமே உள்ளது. ஒருவரின் தனிப்பட்ட தகவல் அனுமதியின்றிப் பகிரப்பட்டால், அது அவரின் அடிப்படை உரிமை மீறல் எனக் கருதப்படும்.

அதனால், இந்நாட்டின் குடிமக்கள் தங்கள் உரிமைகளைப் பாதுகாக்க நீதிமன்றத்தை நாட வேண்டிய நிலை உருவாகியுள்ளது. இது ஒரு ஆரோக்கியமான ஜனநாயகத்தின் அறிகுறி அல்ல.

அரசு, தனியார் நிறுவனங்கள், மருத்துவமனைகள் என அனைத்தும் தரவு பாதுகாப்பு கலாச்சாரம் ஒன்றை உருவாக்குவது அவசியம். 'இணையமயமான நாடு' என்ற பெயருக்கு இணையாக, நம்பிக்கையையும் பாதுகாப்பையும் வழங்கும் சட்ட முறைமை கட்டாயம் தேவைப்படுகிறது.

அதே நேரத்தில் மக்கள் தாமும் விழிப்புடன் இருக்க வேண்டும். தங்களின் தகவல் எங்கே பகிரப்படுகிறது, எந்த நிறுவனம் அதை சேகரிக்கிறது, எந்த நோக்கத்துக்காக பயன்படுத்துகிறது என்பதை அறிந்திருக்க வேண்டும்.

### நம்பிக்கையை மீட்க வேண்டும்

இலங்கை தனது பொருளாதார வளர்ச்சியை டிஜிட்டல் வழியில் தேடிக்கொண்டு இருக்கிறது. ஆனால் அந்த வளர்ச்சி நம்பிக்கையின்றி பயனற்றது. மருத்துவமனைகள் நம்பிக்கையை இழக்கும்போது, அரசின் வாக்குறுதிகளும் வெறும் முழக்கங்களாக மாறும். அதைப் பாதுகாப்பது அரசின் கடமையும், மக்களின் உரிமையும் ஆகும்.

அதற்கான சட்டப் பாதுகாப்பை உடனே அமுல்படுத்துவதுதான், உண்மையான 'இணையமயமான இலங்கை' உருவாகும் முதல் படியாகும்.

# பிரதமரின் இந்தியப் பயணம் நன்மதிப்பை தோற்றுவித்தது

## முன்னாள் அமைச்சர் அலி சப்ரி கருத்து

அண்மையில் பிரதமர் ஹரிணியின் இந்தியப் பயணம் பரவலாக வலுவான நன்மதிப்பைத் தோற்றுவித்திருப்பதாகச் சுட்டிக்காட்டியுள்ள முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி, சர்வதேச அரங்கில் எமது இலங்கை தெளிவுடனும் கௌரவத்துடனும் பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதைக் காண்பதற்கு மகிழ்ச்சியாக இருப்பதாகத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பிரதமர் ஹரிணியின் அண்மைய இந்தியப் பயணம் வலுவான நன்மதிப்பைத் தோற்றுவித்திருக்கின்றது. தான் கல்வி பயின்ற புதுடில்லியின் தேசிய பல்கலைக்கழகத்திலும் என்.டி.ரி.வியின் உலகத் தலைவர் மாநாட்டிலும் பிரதமர் ஆற்றிய உரையானது ஆழமானதாகவும், அறிவுபூர்வமானதாகவும், இலங்கையின் மிகச்சிறந்த தலைமைத்துவத்தினை வெளிப்படுத்தும் வகையிலும் அமைந்திருந்தது.

எமது நாடு அத்தகைய தொரு தெளிவுடனும், கௌரவத்துடனும் பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதைக் காண்பதற்கு மகிழ்ச்சியாக இருக்கின்றது.

அதேபோன்று தீவிர நெருக்கடியில் இருந்து இலங்கை மீள்வதற்கு உதவிய மிக்கடினமான முறையில் வென்றெடுக்கப்பட்ட பொருளாதார அடைவுகள் மற்றும் உறுதியான அயலுறவுக் கொள்கை என்பவற்றில் பரீட்சார்த்த முயற்சிகளை மேற்கொள்வதில்லை என்ற ஆளும்தரப்பின் தீர்மானமும் ஊக்கமளிக்கின்றது.

எம்மால் பாரம்பரியமாகப் பின்பற்றப்பட்டுவரும் சுதந்திரமானதும், எந்தவொரு தரப்பினரையும் சாராத போதிலும் நடைமுறைக்குச் சாத்தியமானதுமான வெளியுறவுக் கொள்கை தொடர்ந்து எமக்குச் சாதகமானதாக அமையும்.

நிதியியல் ஒழுக்கம், வருமான ஒருங்கிணைப்பு, அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் மறுசீரமைப்பு, செலவினங்களை ஈடுசெய்யக்கூடிய விலையிடல் முறைமை, இலக்கிடப்பட்ட சமூகப் பாதுகாப்பு மற்றும் ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகள் என்பன சர்வதேச நாணய நிதியத்தினால் அனுசரணையளிக்கப்படும் மீட்சிக்கான செயற்திட்டத்தின் அடிப்படைகளாக அமைந்துள்ளன. இவை தூரநோக்கு சிந்தனை மற்றும் நடைமுறைக்குச் சாத்தியமான தன்மை என்பவற்றின் ஊடாக அணுகப்படவேண்டுமே தவிர, மறுப்புக்கொள்கையின் அடிப்படையில் கையாளப்படக்கூடாது.

அத்தோடு சட்ட மற்றும் ஒழுங்கை மீளுறுதிப்படுத்தும் அதேவேளை, ஊழல் மோசடிகளை உரியவாறு கையாள்வது இன்றியமையாததாகும். மறுபுறம் மாற்று நோக்கங்களுக்காக சட்ட அமுலாக்கம் தவறான முறையில் பயன்படுத்தப்படக்கூடாது. பெரும்பாலான இலங்கையர்களைப் பொறுத்தமட்டில் யார் நாட்டை ஆள்கின்றார்கள் என்பதைவிட, நேர்மை, இலக்கு, பொறுப்புக்கூறல், ஒழுக்கம் மற்றும் சகலரையும் உள்ளடக்கிய தன்மை என்பவற்றுடன் எவ்வாறு நாட்டை ஆள்கின்றார்கள் என்பதே முக்கியமானதாக இருக்கின்றது. எனவே அதற்கேற்றவாறு கௌரவம் மற்றும் ஒற்றுமையுடன் இலங்கை முன்நோக்கிப் பயணிக்கும் என எதிர்பார்க்கின்றோம் என அப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# மருத்துவர், சட்டத்தரணிகளுக்கான கார் பாஸ்களுக்குத் தடையில்லை

மருத்துவர்கள் மற்றும் சட்டத்தரணிகளுக்கு வழங்கப்படும் கார் பாஸ் ஸ்டிக்கர்களை அகற்றுவது குறித்து எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

சபையில் உரையாற்றிய அமைச்சர் ஜயதிஸ்ஸ, மோட்டார் போக்குவரத்து மற்றும் காவல்துறை உட்பட ஆளும்தரப்பால் அத்தகைய முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என்றார்.

மருத்துவர்களை அடையாளம் காணவும், மருத்துவமனைகளுக்கு எளிதாகச் செல்லவும் கார் பாஸ்கள் வழங்கப்படுவதாக அவர் மேலும் கூறினார்.

'ஆளும்தரப்பு அத்தகைய அடையாள ஆவணத்தை அகற்ற எதிர்பார்க்கவில்லை' என்று அவர் மேலும் கூறினார்.

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் விதமாக சுகாதார அமைச்சர் இந்தக் கருத்துக்களை தெரிவித்தார்.

# ஹரக்கட்டாவின் பாதுகாப்புக்கு 87 அதிகாரிகள் கடமையில்

பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பாதாள உலக கும்பலைச் சேர்ந்த 'ஹரக் கட்டா' என்றழைக்கப்படும் நந்துன் சிந்தக என்பவரின் பாதுகாப்புக்காக சுமார் 87 அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று 'ஹரக் கட்டா'வின் சட்டத்தரணி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் தெரிவித்துள்ளார்.

'ஹரக் கட்டா'வின் சட்டத்தரணி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பிய கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

'ஹரக் கட்டா' 2 ஆண்டுகளுக்கும் அதிக காலமாக சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். குற்றவியல் சட்டங்களின் கீழ் அதிக காலமாக சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டவர் 'ஹரக் கட்டா'தான் என்றும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


FREE GIFTS
உலகத்தரம் வாய்ந்த கணினிகள்
NALIN LAPTOPS
NALIN Information Technologies Pvt Ltd.
DIWALI MEGA OFFER
MOUSE | MOUSEPAD | BAG | 64GB PENDRIVE | POUCH | UMBRELLA | CARD READER
MEGA OFFER
hp
3 years warranty
Windows 11
ASUS
3 years warranty
Windows 11
M365
msi
DELL
1 years warranty
Windows 11
Lenovo
2 years warranty
Windows 11
msi
2 years warranty
STARTING PRICE -RS: 137,000/=
Installment Payment Allowed
VISA
Terms & Conditions Apply
Island wide free delivery
Mon-Sat
Hp World - 077 359 4363 | Jaffna - 077 766 7975 | Exclusive - 076 359 4359
Mannar - 076 359 4368 | Kilinochchi - 076 359 7610


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

# கத்திக் குத்தில் ஒருவர் காயம்

திருகோணமலை சீனக்குடா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கப்பல்துறை பகுதியில் கத்திக்குத்துக்கு இலக்கான நிலையில் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கப்பல்துறை சமுர்த்தி வீதியில் உள்ள வீடு ஒன்றில் இன்று செவ்வாய்க்கிழமை (21) அதிகாலை 2.30 மணியளவில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.



காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com




வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி
B – 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C – 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்
0777 43 55 57


Study MBBS in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION OPEN
CONTACT US FOR ADMISSION
0701348384

# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722





இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.10.2025இல் வெளியிடப்பெற்றது